# செந்தமிழ்

தொகுதி 90 ஜூன்-96 பகுதி 6

திங்கள் இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ.பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

பொறுப்பாசிரியர் : பேரறிஞர் நா. பாலுசாமி,

எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.,எம்.எட்.,

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் செ. கந்தசாமி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்

பேரறிஞர் ச. மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் சி. கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் கு. துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பேரறிஞர் அ.அ. மணவாளன்
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் க.ப. அறவாணன்
மத்திய பல்கலைக் கழகம், புதுவை

பேரறிஞர் சூ. இன்னாசி
கிறித்துவத் தமிழ்த் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

பெரும்புலவர் இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி

பேரறிஞர் சி.மொ. இராசேந்திரன்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பேரறிஞர் நா. பொன்னப்பன்
மதுரைக் கல்லூரி, மதுரை

பேரறிஞர் திருமதி பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் நா.ந. மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை

பேரறிஞர் திருமதி சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக் கழம், மதுரை

பேரறிஞர் எஸ்.எம். கமால்,
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்

பேரறிஞர் ஈ.கே. இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | **சேதுநாடுந் தமிழும்**<br>- மகாவித்வான் ரா. ராகவய்யங்கார் | 215 |
| 2. | **எல்லோர்க்கும் தொல்காப்பியம்**<br>- பேரறிஞர் நா. பாலுசாமி | 226 |
| 3. | **அபிராமி அந்தாதி**<br>- பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி | 235 |
| 4. | **பொன்பாண்டித்துரைத் தேவர் பாடிய காவடிச் சிந்து**<br>- பேரறிஞர் அ. மா. பரிமணம் | 239 |
| 5. | **பாடுபொருள் நோக்கில் ஒப்பாய்வுக் களங்கள்**<br>- பேரறிஞர் கதிர். மகாதேவன் | 246 |

# சேதுநாடுந் தமிழும்*

*மகாவித்வான் ரா. ராகவய்யங்கார்*

தெய்வங் கொள்கையானும் தெய்வ ஞானங்களானும் அவைபற்றிய பெருநூல்களானும் எவ்வுலகுந் தொன்றுதொட்டே ஏத்துஞ்சிறப்புடைய இப்பரதகண்டத்துக்கு இருபெரும் வரம்பாகவுள்ளன ஸேதுவும் இமயமும் என்ப; "ஆஸேதுஹிமாசலபர்யந்தம்" என்பது வழக்கு. இங்ஙனம் சேதுவையும் இமயத்தையும் இருபேரெல்லையாகக் கொண்ட இப்பரதகண்டத்தை வடநாடு, தென்னாடு என இரண்டாகப்பகுத்திடை நின்றுவிளங்குவது திருவேங்கடமெனுந் தெய்வ மாமலையாம். திருவேங்கடத்துக்கு வடக்கிலுள்ள மக்கள் வழங்குவது ஆரியம், வடமொழி எனவும், அதற்குத் தெற்கிலுள்ள மக்கள் வழங்குவது தமிழ் தென் மொழியெனவும் பெயர்பெறும். கல்வியிற் பெரியகம்பரும் "வடசொற்குந்தென் சொற்கும் வரம்பிற்றா நான் மறைக்கு மற்றை நூற்கு, மிடை சொற்ற பொருட்கெல்லாமெல்லையதாய் .......ஓங்கியவேங்கடத்திற் சென்றுறுதிர்மாதோ" என்பதனா லிதனை விளக்கியுரைத்தார்.

---

* இது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதின்மூனாறாம் வருஷக் கூட்டத்திற படிக்கப் பெற்றது. (சனவரி 1915)

சேது என்பது சீராமமூர்த்தி கடன்மேலிட்ட திருவணை. இது கன்னியாகுமரி முதற்றென்பது, மணிமேகலை நூலுள் மணிமேகலா தெய்வம் வந்து தோன்றியகாதைக்கட் "குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறைப், பரந்து சென்மாக்களொடு தேடினன் பெயர்வோன்" என வருதலா னறியப்படும். இதனாற் குமரியையெல்லையாகக் கூறுமிடனெல்லாம் சேதுவைக்கூறின் அது தவறாகாதென்று தெளியலாம். இச் சேதுவையணித்தாவுள்ளபூமி சேதுநாடு, ஸேதுராஜ்யம் என்று பெயர் சிறக்கும். இது மண்ணியனாடு பலவற்றுளும் புண்ணியநாடென்று போற்றப்படும்.

இத்தகைராஜ்யம் பண்டுதொட்டே ஒன்றுண்டென்பது, சங்கரசோழனுலாவென்னும் பழையதமிழ் நூலில்,

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . "போதகலா
மாதுமணக்கு மணவாளன் - சேதுக்குந்
தஞ்சைக்குங் கோழிக்குந் தாமப்புகாருக்கு
முஞ்கைக்கு மேனையுதகைக்கும் - வஞ்சிக்குங்
கொற்கைக்குங் கூடற்குங் கோசலைக்குங்காஞ்சிக்கும்
விற்கைக்கு நில்லாமிதிலைக்கு - நிற்கு
மரசனரசர்குலாந்தகனாரப்
பிரசனபயர்பெருமான்"

எனப் பலநாடுகட்கும் முற்படவைத்துச் சேதுநாட்டை வழங்குதலாற் றெளிந்து கொள்ளலாம். இத்தமிழ் நூற்கேற்பவே ஆக்நேயபுராணாந் தர்க்கதமான புல்லாரண்யக்ஷேத்ர மஹாத்மியத்திற் சீராமமூர்த்தி, ஆங்குத் தன்சீபாதங்களைப் பாக்கியப் பேற்றாற்றொழுது நின்ற நிஷாதத் தலைவனொருவனைத் தான்கட்டியசே துவைப் பரிபாலித்து வருமாறு நியமித்தருளினான் என்று கேட்கப்படுதலானு மிதனுண்மை வலியுறும்.

இந்நிஷாதத்தலைவனு மிவன்வழியினரும் குறுநிலமன்னராய் நின்றுசெந்தமிழ் வளர்த்த செல்வப்பாண்டியரென்னும் முடியுடைப் பேரரசர்க்குப் போர்படைத்தலைவராய் முற்காலத்திலிருந்தனராவர். இவ்வொற்றுமையாற் பாண்டிநாட்டுள்ள சேதுவுக்கும் பாண்டியரே பேரரசராதல் பற்றி, **மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்** என்னும் பழைய சங்கப்புலவர் எழுபதாம் அகப்பாட்டில்,

. . . . . . . . . . . . . . . . . . . . . . "புதுவது
பொன்வீஞாழலொடுபுன்னைவரிக்கும்
கானலம் பெருந்துறைக்கவினிமாநீர்ப்
பாசடைக்கலித்தகணைக்கானெய்தல்
விழவணிமகளிர்தலையணிக்கூட்டும்
வென்வேற்கவுரியர்தொன்முதுகோடி
முழங்கிரும்பௌவமிரங்குமுன்னுறை
வெல்போரிராமனருமறைக்கவித்த
பல்வீழாலம்போல
வொலியவிந்தன்றிவ்வழுங்கலூரே"

என்பதனாற் றிருவணையாகிய சேதுமுன்றுறையைக் கவுரியராகிய பாண்டியருடையதென்று சொற்றார்.

இதன்கட் சீராமமூர்த்தியார் தாமும் பரிகரமுமாகச் சில இரகசியம் விசாரிக்கப்புக்கபோது இக்கடற்கரையினுள்ள தோராலமரத்துப் பறவைகள் கூக்குரல் அதற்குத் தடையாதல்கண்டு அவை யொலியடங்கக் கையமைத்தருளினார் என்பது கேட்கப்படுகின்றது. இச்செய்தி நிகழ்ந்ததலம் இப்போது நவபாஷாணமென்று பெயர்சிறந்ததென்பதும் இக்காரணம் பற்றியே ஆங்குக் கடலும் ஒலியவிந்துளதென்பதும் நாம் பழைமையாய்க் கேட்பனவேயாம்.

சேதுபாண்டியனென்ற பெயர் வழக்கம் இச்சேதுகாவலர் மரபினர்க்குள் அதிகமாகக்காண்டலானும் சேதுபற்றிப் பாண்டியர்க்குள்ள தலைமை நன்றூகிக்கப்படும். இப்பாண்டியரும், இவரோடொருதன்மை யராகிய சேர சோழரும் படைப்புக்காலந் தொட்டே மேம்பட்டுவருதலுடைய பழையதமிழ்க்குடியினராவர். "வழங்குவதுள் வீழ்ந்தக்கண்ணும் பழங்குடி, பண்பிற்றலைப் பிரிதலின்று" என்னுந் திருக்குறளுரையில் ஆசிரியர் பரிமேலழகர் பழங்குடியென்பதற்குத் தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட்பிறந்தாரென் றுரைகூறித் தொன்று தொட்டு வருதல் சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டுவருதல் என விளக்கினார். இதனாலும், வான்மீகிபகவான் சீராமாயணத்து ஸுக்ரீவன் வானரசேனையை நாடவிட்ட தருணத்துப் பாண்டியர் செல்வச்சிறப்பையும் அவரது

கபாடபுரத்தையும் சேரசோழ ராச்சியங்களையும் எடுத்தோதுதலானும் இவர்பழைமை நன்குணரப்படும்.

இத்தமிழ்வேந்தர் மூவரும் ஆறங்கமுநிரம்பிய முடியுடைப் பேரரசராதலான் இவர் பழைமை கூறியதனானே இவர்க்குப் படைத்துணையாய்த் தொன்றுதொட்டுமுள்ள வீரர் பழைமையுங் கூறியதேயாம். இவ்வீரர் **பாண்டியன்மறவர் சேரன்மறவர் சோழன்மறவர்** என்று வழங்கப்படுவர். இம்மறவரைப்பற்றி யான் செந்தமிழ்ப் பத்திரிகை நடாத்திய காலத்துச் சேதுபதிகள் என்ற வியாசத்தில் நிரம்ப எழுதினேனாதலாலீண்டைக்குவேறே கூறாமல் விடுக்கின்றேன்.

பாண்டியர் தலைமைக்குள்ளாய இச்சேதுநாடு, சோழர் பாண்டியரைவென்று பாண்டிநாட்டிற் பெரும்பகுதியைத் தந்நாடாக்கிக் கொண்ட காலந்தொடங்கிச் செம்பிநாடாய், இந்நாட்டுமறவர், சோழன் மறவராயகாரணத்தாற் செம்பிநாட்டுமறவ ரெனப் பெயர் பெற்றனராவர். இப்போதும், சேதுநாட்டினைச் சேர்ந்ததாகவுள்ள 'மணக்குடி' என்ற ஊரையுடைய இடையளநாட்டை,

"வளவர்காக்கும்வள நாட்டுள்ளு
நாடெனச்சிறந்த பீடுகெழுசிறப்பிற்
கெடலருஞ்செல்வத்திடையளநாட்டுத்
தீதில்கொள்கைமூதூருள்ளு
மூரெனச்சிறந்தசீர்கெழுமணக்குடி"

என நெடுந்தொகைக்க ருத்துரைப்பாயிரத்துக் கூறியதனானும், சேது நாட்டுத் தொண்டிப்பட்டினத்தையுடையராக வைத்துச் சிலப்பதி- காரவூர்காண்காதைக்கண் "வங்கவீட்டத்துத்தொண்டியோ" ரென்று சோழரைக் கூறியதனானும் பாண்டியராட்சிக்குள்ளாய இச் சேதுநாட்டுப் பெரும்பகுதி சோழராட்சிக்குள்ளாய செய்தி துணியப்படும்.

இச்சேதுநாடாண்டா மறவர் தலைவரெல்லாம், இவ் விருவேந்தர்க்கும் போர்த்துணையாய் நின்ற காரணம் பற்றியே "பாண்டியமண்டலஸ்தாபனா சாரியன், சோளமண்டலப் ரதிஷ்டாபகன் என்னும் விருதாவளிகுடினராவர். இவ்விருதாவளி இவருடைய பழைய சாசனங்களிலெல்லாங் காணலாம்.

இனி மூவேந்தருட் செந்தமிழ்ச்சங்கஞ் சீர்பெற ஓம்பியகாரணத்தாற் றமிழுடையாரென்று நல்லிசைப்புலவராற் புகழப்பட்ட அறிவுடைப் பாண்டியராட்சிதொட்டே புண்ணிய முடைமையானன்றிச் செந்தமிழ்க்கல்வியானு மிச்சேதுநாடு சிறந்ததென்பதற்குச் சான்றாகச் சில கூறுவேன்.

கொற்கையினும் மதுரையினும் வளர்ந்த நறுந்தமிழ்மணம் அவற்றுக்கு மிகவும் அணித்தாய இச்சேதுநாட்டு வீசாதென் றியார்தாஞ் சொல்லத்துணிவர். பொன்னாங்கா லமுத்கவிராயரும் ரகுநாதசேது பதியைப்புகழுமிடத்து,

> "பால்வாய்ப்பசுந்தமிழ் வீசியவாசம்பரந்தவைகைக்
> கால்வாய்த்த வீரையர்கோன் ரகுநாதன்"

எனப் பாடுதல் காண்க. பரமேதிகாசக்ஷேத்ரமாகவும், சரணாகதிதர்மம் விளைந்தபெருநிலனாகவும், கருணாகரன் ஸர்ஜீவர்க்கும் அபயப்ரதானம் அருளிய திவ்யஸ்தலமாகவும், இச்சேதுநாட்டுக்கோர் திலகமாகவும் விளங்கும் திருப்புல்லாணி எனப் பெயர் பூண்ட தர்ப்பசயனத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸர்வேச்வரன் ஞானஸ்வரூபியாதலை உலகெலாமறிந்துய்ய வேண்டி ஆழ்வார் திருமங்கையார் பெரியதிருமட லென்னுந்திவ்யப்ரபந்தத்து, புல்லாணித் தென்னர்தமிழைவடமொழியை என்று பணித்தருளிய சிறப்பு இந்நாட்டின் கல்விச்சிறப்புப்பற்றியதென்று நன்குணர்ந்துகொள்க. தெய்வமே தென்மொழி வடமொழியாக மூர்த்தீகரித்தமர்ந்தருளியது இச்சேதுநாட்டுக்கே சிறந்ததென்று துணியப்படும்.

இன்னும், அத்தலத்துமூர்த்தியை "வேதமுமானா" னென்றும், "அன்னமாய் நூல்பயந்தா" னென்றும் ஆழ்வார் வழங்கியருளுதலையும் நோக்குக. இப்பெருமையெல்லாங்கருதியே சேதுபதிகள் இத்திருக் கோயிலிற் பெருந்திருப்பணியெல்லாம் முற்றுவித்தனராவர்;

> "எனதன்மமாயினுந்தான் கற்பகாலமிருக்கவுன்போன்
> மனதினினைந்தபடி செய்யயார்க்கும் வராதுகண்டாய்
> கனதனமால் திருப்புல்லாணிக் கோபுரங்கட்டிவைத்த
> தனதவிஜயரகுநாத சேதுதளசிங்கமே"

"எனதன்மமாயினுந்தான் கற்பகாலமிருக்கவுன்போன்
மனதினினைந்தபடி செய்யயார்க்கும் வராதுகண்டாய்
கனதனமால் திருப்புல்லாணிக் கோபுரங்கட்டிவைத்த
தனதவிஜயரகுநாத சேதுதளசிங்கமே"

என மிதிலைப்பட்டி அழகியசிற்றம்பலக்கவிராயர் பாடியதனா னிதனையுணர்க. சேதுநாட்டுக்கு மூலகாரணனான சீராமமூர்த்தியைக் கல்வியிற் பெரியரான கம்பர், "தென்சொற்கடந்தான் வட சொற்கடற்கெல்லை தேர்ந்தான்" என்றே பாடினார். சீதாப் பிராட்டியாரைத் தேடவிடும்போது அநுமானை வேறுகொண்டு சீராமமூர்த்தி, "இராவணன் தேவபாஷையறிந்தவனாதலான் அதனைச் சீதைமுன்போதாது மாநுஷபாஷையி லிரகசியங்களெல்லாவற்றையும் ஓதுக" என்று கூறியருளினனென்று வான்மீகி பகவானி ராமாயணத்துக் கேட்கப்படுதலாற் சீராமமூர்த்திக்கும் சீதாப் பிராட்டிக்கும் அநுமானுக்கும் அவ்விருமொழிவன்மையும் உண்டென்று நன்று தெளியலாம். அவர் திருவருள் பெருகிய இச்சேதுநாட்டுக்கு அவ்விருமொழிவன்மையுமுண்டாத லொருதலை. இச்சேதுநாட்டினொரு பகுதியாய நாட்டரசன்கோட்டையூர்ப் புறத்துநாடு வடகலைவேள்விநாடா தலையும் தெளிந்துகொள்க.

இனிப் "பத்தரெல்லாம் பார்மேற்சிவபுரம் போறகொண்டாடு, முத்தரகோசமங்கையூர்" என்று திருவாதவூரடிகளாற் றிருவாய் மலர்ந்தருளப்பெற்ற திருவுத்தரகோசமங்கைத்தலத்தைத் தன்கட் கொண்ட பெருஞ்சிறப்பானும் சேதுநாட்டின் கல்விஞானமேம்பாடே தெளிவிப்பதாகும். வடக்கட் கைலையங்கிரியினிருந்தஞான நூல்களும் உமாதேவியாரும் ஒருகாணத்தான் இத்திருவுத்தரகோசமங்கைப் பாக்கத்துத் தோன்றியருளி, உமாதேவியார் முன்கேளாதனவெல்லாம் இத்தலத்தே சிவபிரான்பாற்கேட்டருளினாள் என்பது இத்தல புராணத்தாற் றெரிந்தது. இது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தானுந் தெளியத்தகும்.

இஃதன்றி, அறிவாற்சிவனென்று சிறப்பிக்கப்பட்ட திருவாதவூரடிகள் திவ்யஞானம் பெற்ற திருப்பெருந்துறையும் இச்சேதுநாட்டதேயாயின் இதன் பெருமையை யாமே எடுத்துரைக்க வல்லேம்? இச்சேது நாட்டுள்ளாய திருவுத்தரகோசமங்கைத் தலத்தைத்

தன்கட்கொண்ட தென்பாண்டிநாட்டையே ''ஏழ்பொழிற்கு, நாதனமையாளுடையானாடு" என்று திருவாதவூரடிகள் சிறப்பித்தவாற்றானும், உலகெலாமுடைய சிவபிரானைத் ''தென்னாடுடைய சிவனே போற்றி" என்று இச்சேதுநாடுடைமையாற் புகழ்ந்தருளியவாற்றானும் இதன்ஞானமேம்பாடு நன்றுணரலாகும்.

இக்காரணங்களாலும், இதன் புண்ணியவிசேடங்களாலும் இச்சேதுநாடொன்றே நாடென்று வழங்கப்படும்போலும்; இதனை; ''ஊரெனப்படுவதுறையூர்" ''பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" ''கோயிலென்பது கோன்றிருவரங்கம்" ''கோயிலென்பது குளிர் பொழிற்றில்லை" என்பன போலக் கொள்க. நாட்டரசன்கோட்டை யென்பதுக்குச் சேது நாட்டரசனுடைய அரண் என்பதே பொருளாதலானும், புகார்ப்பட்டி னம்விட்டுச் சேதுநாட்டுக்குடிபுக்க பண்டையோர் வழியினராகியவணிக நன்மக்களெல்லாம் இன்றும் நாட்டுக்கோட்டையாரென்றே பெயர் சிறத்தலானும், திருமலைச் சேதுபதியைப் படிக்காசுப்புலவர் ''நாட்டிற் சிறந்த திருமலையா" என்று விளித்துப்பாடுதலானும் இதனுண்மை ஊகிக்கப்படும். முன்பு புகார் நகரத்தராய்ப் பின்பு இப்புண்ணியநாடு புக்க வணிகநன்மக்கள் நாட்டார் என்று பெயர்சிறந்த சேதுநாட்டாரினின்று தம்மை வேறுபிரித்துணரவே நகரத்தார் என்று வழக்குப் பெற்றாராவரென் றுன்னுதல்கூடும்.

இங்ஙனம் புண்ணியமும் ஞானமுந்தழைத்த இச்சேதுநாடாட்சி பெற்ற பாக்கியவான்களாகிய சேதுபதிகளை வைணவரெலாம் ''திருவுடைமன்னரைக் காணிற் றிருமாலைக்கண்டேனேயென்னும்" என்னுமுறையாற் சீராமமூர்த்தியாகவும், சைவரெல்லாம் சீராமநாதமூர்த்தியாகவும் உபசரித்து உசிதமரியாதை செய்தலும் இந்நாட்டுத் தொன்று தொட்டமரபாம். இதனை,

''சேதுபதியென்று நரசென்மமெடுத்தாய்கமல
மாதுபதிக்குன்பேர்வாய்க்கும்ா - பூதலத்தி
னீயேரகுராமனின்னையேபெற்றெடுத்த
தாயேயருட்கோசலை"

எனவழங்கும் பழையவெண்பாவானும்,

"ஆதிபதியான மண்டலாதிபதிவம் சபதியரசர்க்கென்று
நீதிபதி சத்ரபதிசமஸ்தானபதி விஜயநிறைந்தேநிற்கு
மாதுபதி துரகஜபதிநராதிபதிவளர்தென்றேவைச்
சேதுபதி தரிசன மேராமலிங்கதரிசனமாச் செப்பலாமே"

என்று வழங்கும் பழைய விருத்தத்தானும் நன்கறிந்துகொள்க.

இவருடைய புண்ணியநாடு தமிழிற்பெரியஞானிகட்கு மிடமாயதென்பது, சைவத்திற்சிறந்த ஞானியோகியாகி தாயுமானவர் நெடுநாட்டங்கிச் சமாதியடைந்தருளிய முகவையும், விசத வாக்சிகாமணியாய் வைஷ்ணவாசாரியராய்த் தெய்வமும் அழைத்துப் பேசுந் தூயஞானமும் உடைய மணவாளமாமுனிவர் வளர்ந்துசிறந்த சிக்கற் கடாரமும் தன்பாற்கொண்டு விளங்குவதனாற் பலரும் அறியத்தக்கது. இவ்விரண்டு ஞானாசாரியர்களும் பாடியருளிய தமிழ்ப்பாடல்களின் பெருமை கற்றாரறிந்ததே. மணவாள மாமுனிவரைத் தெய்வமழைத்துப் பேசியருளியசெய்தி,

"நாமார் பெரிய திருமண்டபமார்நம் பெருமாள்
தாமாகவென்னைத் தனித்தழைத்து - நீமாறன்
செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை நாளுமிங்கே
வந்துரையென் றேவுவதேவாய்ந்து"

என்று அவர் ஈடுபட்டோதியருளிய வெண்பாவானறிந்தது. இவரவதாரஸ்தலம் குந்திநகரமென்ப. இதுவே கொந்தகையென்று இப்போது வழங்குவதாகும்.

இனிப் பழைய சங்கப்புலவர்க்குள்ளும் இச்சேது நாட்டேபிறந்தார் பலருண்டென்பது அவரவர் ஊரா னுணரப்படுவது. நல்லந்தையார் என்பார் நற்றிணை 211 ஆம்பாட்டுப் பாடியவர். இவருடையவூர். கோட்டியூர். இது சிவகங்கையைச்சார்ந்த பெரிய திவ்யஸ்தலமென்பது. பலருமறிந்ததே. இத்திருப்பதியைப்பாடியருளிய ஆழ்வார் திருமங்கை மன்னர், "கோவையின்றமிழ்பாடுவார்தொழுந் தேவதேவன் திருக்கோட்டியூர்" என்று சிறப்பித்தருளுதலான் இவ்வூர்க்கண் அகப் பொருட்டமிழ்பாடும் புலவரிருதனரென்று குறித்தருளினராவர். அள்ளூர் நன்முல்லையார் குறுந்தொகை 32ஆம் பாட்டும் நெடுந்தொகை 46ம் பாடட்டும் பாடிய்வர். இவ ரள்ளூர் இச்சேதுநாட்டுச் சிவகங்கையைச்சார்ந்துள்ளது. வெள்ளைக்குடி நாகனார் நற்றிணை 158ஆம் பாட்டுப் படியவர். இவரூர் சேதுநாட்டுத்

திருவேகன்பற்றுச் சேகரத்துள்ளது. ஒக்கூர் மாசாத்தியார் பாடியன குறுந்தொகையினு நெடுந்தொகையினும் பலபாடல்களுள்ளன. இவருடைய ஒக்கூர் மேற்காட்டிய கோட்டியூர்ப்பக்கத்தேயுள்ளது. பதினெண்கீழ்க்கணக்கினுளொன்றாகிய கைந்நிலைபாடியவர் புல்லங்காடரெனப்படுவர். புல்லங்காடு புல்லாரணியம்; இது திருப்புல்லாணியாகும்.

இத்தகைப் பெருந் தமிழ்ச்சங்கப்புலவரெல்லாம் பிறந்துசிறந்த இச்செந்தமிழ்ச்சேதுநாட்டி விழிகுலச்சிறுவரும் அறிவான் முதிர்ந்தவராவரென்பது பாண்டியனைக்காண்பான் இச்சேதுநாட்டு நெறியேபுக்க கம்பர், நாட்டரசன்கோட்டைக்காட்டில் எருமைமேய்ப்பார் இளையர் சிலரைக்கண்டு முடிக்கரைக்குநெறி யாதென்று வினாவியபோது அவர் அடிக்கரை பிடித்தேகின் முடிக்கரையெய்தலாகுன்று கூறக்கேட்டு அதன் பொருள் தெரியாது திகைத்துப் பின் றெளிந்து,

"கருங்காலிக்கட்டைக்கு நாணாக்கோடாரி
யிருங்கதலித்தண்டுக்குநாணு - மருங்காகக்
காட்டெருமை மேய்க்கின்ற காளையர்க்கேயாந்தோற்றோம்
நாட்டரசன்கோட்டைநகர்க்கு"

என்று பாடியதனான் அறியலாகும். இதனை, முத்துநாயகப்புலவர் தாமிற்றிய "கண்ணுடையம்மைபள்ளு" என்னுநூலில்,

"வாசமான தென்பாண்டிநன்னாடு மதுரைநாட்டில்
வளருமிந்நாடு
காசினிக்குட் கதிர்க்கின்றநாடுமுன் கம்பர்வந்துதுதிக்கின்றநாடு
பூசுரர்க்கன்னதானஞ்செய்நாடு புலவர் மேலபிமானஞ்செய்நாடு
ராஜலக்ஷுமி கண்ணுடையாளருள் நல்குநாட்டரசன்
கோட்டைநாடே"

எனப் பாடியவாற்றா னறிந்துகொள்க. இச்சிறப்பெல்லாந்தெரிந்தே இந்நாட்டரசன்கோட்டைக் கண்ணுடையம்மைகோயிற் கொடிக்கம்ப மண்டபம் முதலிய திருப்பணிகள் சேதுபதிகளாலியற்றப்பட்டனவென் றெண்ணுகின்றேன். அந்நூலிற் "கனவிஜயரகுநாத சேதுபதி செய்த கொடிக்கம்ப மண்டபம் புகழக் கூவாய்குயிலே" எனவருதலான் இஃதறியப்படும். இச்சேதுநாட்டு நாட்டரசன்கோட்டைக்கண்

இவ்வம்மையருளால் அவித்த நென்முளைப்பதை யின்றுங்காணலாம்; இதனை,

"கண்ணுடைய தாய்மகிமை காசினியோரிவ்வளவென்
றெண்ணுடையதாய்மதிக்கவேலாது - மண்ணுடைய
புன்முளைக்கவெத்தநாட்போகுமுட னேயவித்த
நென்முளைத்தல் சான்றுநிசம்"

என்னும் பாடலா னறிக.

இங்ஙனம், கல்வியிற் பெரியகம்பராற் புகழப்பட்ட பெருஞ்சிறப்பேயல்லாமல், உலகெலாம் கவிராக்ஷஸன் எனவும், கவுடப்புலவனெனவும், கூத்தன் கவிச்சக்கரவர்த்தியெனவும் ஏத்துங் கல்விச்சிறப்புடைய ஒட்டக்கூத்தரைப் பிறப்பித்ததும் இச் செந்தமிழ்ச் சேதுநாடேயென்பது காட்டுவேன். கம்பர் திருமகனார் அம்பிகாபதியார்க்குத் திருமகனாராகிய தண்டியென்னுந் தமிழாசிரியர், தாம்பாடிய அலங்கார நூற்கண்,

"சென்றுசெவியளக்குஞ் செம்மையவாய்ச்சிந்தையுள்ளே
நின்றளவிலின் பநிறைப்பவற்று - ளொன்று
மலரிவருங் கூந்தலார் மாதர் நோக்கொன்று
மலரிவருங்கூத்தன்றன்வாக்கு"

என்னும் வெண்பாவாற் செவியளந்துகொண்டு சிந்தையுள்ளேநின்று அளவிலின்ப நிறைக்கும் வாக்கையுடைய கூத்தரை மலரியென்னும் ஊரின்கண்வந்தவரென்றார். இந்நூலுரைகாரரும், மலரிஒரூர் என்று உரைத்தார். இவ்வூர் இச்சேதுநாட்டு ராஜசிங்கமங்கலச் சேகரத்துள்ளது. இதன்கண்ணேவாழ்ந்த செங்குந்தர் வழியினர்பலர் வேற்றூர் புக்குவாழ்கின்றனர். இவர் முதலிகள் எனப்படுவர். தமிழ்நாவலர் சரிதையுடையாரும் கூத்தரைக் கூத்தமுதலியாரென்றே வழங்குதல் காண்க.

இத்தொன்னூலாசிரியரேயன்றிச் செந்தமிழ்த் தொன்னூல்கட் குரையிட்ட நல்லாசிரியரும், இச்சேதுநாட்டுண்டென்று காட்டுவேன்.

"நெடுந்தொகைக்குக் கருத்து அகவலாற்பாடினான் இடையளநாட்டு மணக்குடியான் பால்வண்ணன்றேவனானவில்லவதரையன்" என்று அகநானூற்றுரை யேட்டிற் காணப்பட்டது.

மணக்குடியென்பது சேதுநாட்டு உப்பூருக்குவடக்க ணுள்ளதோரூர். இதன் பக்கத்தே இன்றும் உப்பளமுள்ளது. இவ்வூருடையநாட்டை அளநாடென்றும், அந்நாட்டுக்குவடக்கும் அந்நாட்டுக்குத் தெற்கும் பல அளங்களிருத்தல்பற்றி அதனை இடையளநாடு என்று வழங்கப்பட்ட் தென்றுந் தேறலாகும்.

இனித் தமிழிற் சிறந்த பெருநூலாகிய திருக்குறட்கு உரையியற் றினார்பலருள், பரிப்பெருமாள் என்று பெயர்சிறந்தார் பிறந்துவளர்ந்ததும் இத்தமிழ்ச்சேதுநாடேயாம். இதனை,

“தெள்ளிமொழியியலைத் தேர்ந்துரைத்துத்தே மொழியா
ரொள்ளியகாமநூ லோர்ந்துரைத்து - வள்ளுவனார்
பொய்யற்றமுப்பாற் பொருளுரைத்தான் றென்செழுவத்
தெய்வப்பரிப்பெருமாள் தேர்ந்து”

என்னுஞ் சிறப்புப்பாயிரத்தாலறிக. இவருரை தலையாய பரிமேலழகருரைப் பின்சாரநன்று என்று தெளியலாகும். பரிப்பெருமாளைப் பரி என்று கொண்டு, அவரினும் உரைவன்மையான் அழகுடையராதலாற் பரிமேலழகரெனப் பட்டாரோ என்று ஊகிக்க இடனாகின்றது. அத்தகைத் திருக்குறளுரையாளருடைய தென்செழுவை இச்சேதுநாட்டதேயாம். மேற்காட்டிய வெண்பாவினால் இப்பரிப்பெருமாள் சொல்லிணக் கனூலொன்றும், காமநூலொன்றும் ஆராய்ந்துரைத்துள்ளாரென்று தெளியப்படும்.

இவர்க்குப்பின் இச்சேதுநாட்டுப் பிறந்து சிறந்த புலவர் தொகையை எண்ணி இனைத்தெனல் இயலாததொன்றேனும் என்சிற்றறிவுக்கியன்றவரை முயன்று சிலரைப்பற்றிக் கூறவெழுகின்றேன்.

சேதுநாட்டைச் சார்ந்த வேம்பற்றூர் ஒன்றிலே செவ்வைச் சூடுவார் என்பார் பாகவதபுராணம் தமிழிற்பாடினார். இஃது ஆரியப்பப்புலவர் பாகவதம் என்று தவறாக வெளியிடப்பட்டது. இத்தவற்றைப்பற்றி முன்னரே செவ்வைச்சூடுவாரும் அனதாரியும் என்ற தலைப்பிட்டவியாசத்தில் யான் செந்தமிழ்க்கண் எழுதியுள்ளேன்.

( தொடரும் )

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

பேரறிஞர் நா. பாலுசாமி

(தொல் - சொல் - கிளவியாக்கம்)

*( முன் இதழ்த் தொடர்ச்சி . . . )*

## சூத்திரம் *51*

பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

(ப.உரை) செய்யுளுள் - இலக்கயத்தில், எண்ணு - பலவாக எண்ணப்படும், திணைவிரவுப் பெயர் - இருதிணைகளும் கலந்துவரும் பெயர்கள், பலவயினானும் - பெரும்பாலும், அஃறிணை முடிபின - அஃறிணைச் சொல்கொண்டு முடியும் தன்மையன.

ஒன்றுக்குமேல் பலவாக எண்ணப்படும் கலப்புப் பெயர்கள் இலக்கியத்தில் பயிலும்போது அஃறிணைச் சொல் கொண்டே முடியும்; சிறுபான்மை உயர்திணை கொண்டு முடியும்.

(வி.உரை) பலவயின் பெரும்பாலும் எண்ணுத்திணை - ஒன்றுக்கு மேற்பட்டு எண்ணப்படுகின்ற திணைப் பெயர்கள். விரவுப்பெயர் கலப்புப் பெயர்கள்; அதாவது உயர்திணைப்

பெயர்களும் அஃறிணைப்பெயர்களும் கலந்து வருதல். செய்யுள் - செய்யுள் வழக்கு அல்லது இலக்கிய வழக்கு; உலகியல் வழக்கன்று. ஏ-அசை. முடிபின - அஃறிணைப் பன்மை வினைமுற்று. விரவுப்பெயர் - எழுவாய்.

(எ.டு) ஆசிரியர், மாணாக்கர், புத்தகம், எழுதுகோல் என்றிவை நான்கும் மனம் கொள்க.

இந்த எடுத்துக்காட்டில் ஆசிரியரும் மாணாக்கரும் உயர்திணைப் பெயர்கள்; புத்தகமும் எழுதுகோலும் அஃறிணைப் பெயர்கள். **இவை** அஃறிணைப் பெயர். இவ்வாறு உயர்திணைப் பெயர்களும் கலந்துவரினும், அஃறிணைச் சொல்லாகிய **இவை** என்பது கொண்டு முடிந்துள்ளமை அறிக. இலக்கியத்தில் பெரும்பாலும் இவ்வாறு முடியும். சிறுபான்மை இவ்வரவுப் பெயர்கள் உயர்திணைச் சொல் கொண்டும் முடியும் (எ.டு) தாய், தந்தை, ஆசிரியர், பசு, அறவோர் **இவர்களைப்** போற்றுக. இங்குப் பசு ஒழிந்த ஏனைய பெயர்கள் உயர்திணைக் குரியவை. பசு அஃறிணை; எனினும் உயர்திணைச் சொல்லாகிய **இவர்கள்** என்பது கொண்டு முடிந்தமை அறிக.

## சூத்திரம் 52

(பலபொருள் ஒருசொல் அமையும்விதம்)

**வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்**
**வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொலென்று**
**ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்**

(ப.ரை) பலபொருள் ஒரு சொல் - பல பொருள்களைக் குறித்துவரும் ஒரு பொதுச் சொல், வினை - வினைச்சொல்லால், வேறுபடும் - வெவ்வேறு பொருளாகக் கருதப்படும், பல பொருள் ஒருசொல் - பலபொருள் குறித்து வரும் பொதுச்சொல் என்றும், வினை - வினைச் சொல்லால் வேறுபடா - வெவ்வேறு பொருளைக் குறிக்காமல் வரும், பல பொருள் ஒரு சொல் என்று - பல பொருள்களைக் குறித்து வரும் பொதுச்சொல் என்றும், இருவகைய - இரண்டு வகைப்படும்.

பல பொருள்களைக் குறித்து வரும் ஒரு பொதுப் பெயர்ச்சொல், கொண்டு முடிக்கும் வினைச் சொல்லால்

வேறுபடுகின்ற பொதுச் சொல் என்றும், வேறுபடாத பொதுச்சொல் என்றும் இருவகைப்படும்.

(வி.ரை) படூஉம் - அளபெடை, படும் என்பதே சொல். ஆயிரு - அவ்வாறு இருவகைப்படும். 'அ' என்பது 'ஆ' என நீண்டது. அவ்விரு வகைய (அ + இருவகைய) என்றிருத்தல் வேண்டும். இச்சூத்திரத்தால் பொதுச்சொல் இருவகைப்படும் என்பது சுட்டப்பட்டது.

இது பின்வரும் இரண்டு சூத்திரங்களுக்குப் (53, 54) பொதுச் சூத்திரம். எனவே எடுத்துக்காட்டுகள் பின்னர் தரப்படும். சுருங்கக் கூறின், பல பொருட் பெயர்களைக் குறித்து வரும் ஒரு பெயர்ச்சொல் பலபொருள் ஒரு சொல் எனப்படும். விளக்கம் பின்வரும் சூத்திரங்களில் காண்க.

## சூத்திரம் 53

அவற்றுள்,
வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.

(ப.ரை) அவற்றுள் மேலே கூறப்பட்ட இருவகைப் பொதுச் சொற்களுள்ளும், வினை வேறுபடும் - வேறுபட்ட வினைச் சொற்களால் முடியும், பலபொருள் ஒருசொல் - பல்வேறுபட்ட பொருள்களை உணர்த்தும் ஒரு பொதுச் சொல், பொருள் தெரிநிலை - பொருளைப் புலப்படுத்துங்கால், வேறுபடுவின்னயினும் - வேறுபடுத்திக் காட்டத்தரும் வினைச் சொற்களாலும், இனத்தினும் - இனத்தாலும், சார்பினும் - சார்பாலும், தேற - தெளிவாக, தோன்றும் - விளங்கும்.

வெவ்வேறு வினைமுற்றுக்கள் கொண்டு முடியும் பல பொருள் குறித்த ஒரு பொதுச் சொல், பொருளைப் புலப்படுத்தும்போது வேறுபடுத்தும் வினைச் சொல்லாலும், தன்னைச் சார்ந்த இனத்தாலும், இவையிரண்டும் அல்லாத ஏதாவது ஒரு சார்பாலும் பொதுமை நீங்கித் தெளிவாகப் புலப்படும்.

(வி.ரை) இனம் - ஒன்றுக்குமேற்பட்ட பொருள்கள் ஓரினத்தைச் சார்ந்திருப்பது. வினை - சிறப்பு வினைமுற்று. சார்பு - யாதாயினும் ஒரு வகையில் அப்பொருளைச் சார்ந்து வருவது.

(எ.டு) மா என்பது விலங்கையும், மரத்தையும், வண்டையும் குறிக்கும் பல பொருள் உணர்த்தும் ஒரு பொதுச்சொல். அவ்வாறே நாகம் என்பது மலை, யானை, பாம்பு முதலிய பல பொருள்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்.

'மா பூத்தது' இங்குப் 'பூத்தது' என்னும் சிறப்பு வினைமுற்றால் மா என்பது மாமரத்தைக் குறித்தது. விலங்கையோ வண்டையோ உணர்த்தவில்லை. இது வினைச்சொல்லால் தெளிந்த பொருளைச் சுட்டியது. 'மாவும் கோங்கும்' ஓங்கின - இத்தொடரில் 'ஓங்கின' என்னும் சிறப்பு வினையால் மாமரமும் கோங்கு மரமும் குறிக்கப்பெற்றன. மாவும்கோங்கும் இனம் பற்றியவை; இவை ஒரே இனம். எனவே இனத்தால் பொருள் தெளிவாயிற்று. இனி, கவசம் அணிந்த வீரன் ஒருவன் **'மா கொண்டுவா'** என்றால், மா என்பது குதிரையைச் சுட்டும். இங்குக் **கவசம்** என்ற சொல்லால் சார்புற்றிக் குதிரையை உணர்த்தியது. இவ்வாறு பொதுச்சொல் ஒன்று சிறப்பு வினையாலும், இனத்தாலும், யாதானும் ஒருசார்பாலும் இன்னபொருள் என்று தெளிவாக உணர்த்தும் என்பது இச்சூத்திரக் கருத்தாம்.

இனம் சாதி; சார்பு சாதியல்லாது பிறிதொரு சார்பு குறிக்கும். **கவசம்** என்பது சார்பு; இதனால் மா என்பது குதிரையைக் குறித்தது.

## சூத்திரம் 54

ஒன்றுவினை மருங்கில் ஒன்றித்தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
நினையும் காலைக் கிளந்தாங்கு இயலும்

(ப.ரை) நினையும் காலை - ஆலோசிக்குமிடத்து, ஒன்று வினைமருங்கில் - பொருந்திய பொதுவினைச் சொல்லைப் பெற்று வரும்போது, ஒன்றித் தோன்றும் - பொருந்தி நிற்கின்ற, வினைவேறுபடா - வெவ்வேறு வினைச்சொற்களைக் கொள்ளாத, பலபொருள் ஒரு சொல் - பலபொருள்களை உணர்த்தி வரும் ஒரு பொதுப் பெயர்ச்சொல், கிளந்து இயலும் - இன்னது எனச் சுட்டி விளக்கமாகக் கூறும்.

ஆலோசிக்குமிடத்து, பொதுவினை ஒன்றைப் பெற்றுப் பொருந்தி வரும் வேவ்வேறு வினை கொள்ளாத ஒரு பொதுப் பெயர்ச்சொல், இது இன்னதுதான என்று விளக்கமாக எடுத்துக்கூறும்.

(வி.ரை) நினையும் கால் சிந்திக்கும் போது 'ஐ' சாரியை (பொருளற்றது) ஒன்றுதல் - பொருந்துதல் இச்சூத்திரத்தில் வரும் முதல் அடியாகிய "ஒன்று வினை மருங்கில் ஒன்றித்

தோன்றும்” என்பது பலபொருள் ஒரு சொல்லுக்கு அடையாக வந்துள்ளது; அஃதாவது அதனை விளக்கி நிற்பதாகும். கிளத்தல் எடுத்து விளக்குதல் ‘ஆங்கு’ அசைச்சொல். பலபொருள் ஒரு சொல் எழுவாய்; இயலும் பயனிலை (வினைமுற்று); கிளந்து வினை எச்சம்.

(எ.டு) ‘மா’ - இது மரம், குதிரை இரண்டற்கும் பொதுச் சொல். ‘மா பூத்தது’ இத்தொடரில் **‘பூத்தது’** என்ற சிறப்பு வினையால் மா என்பது மரத்தையே (மாமரம்) குறிக்கும் இவ்வாறன்றி, ‘மா வீழ்ந்தது’ என்றால், **வீழ்ந்தது** என்ற பொதுவினையால் மாமரம். வீழ்ந்தது என்றும் குதிரை (மா) வீழ்ந்தது என்று பொருள்படும். வீழ்ந்தது என்பது பொதுவினை. இவ்வாறு வினை வேறுபடாத பலபொருள் ஒருசொல் பொதுவினை கொண்டு முடியும் என்பது அறிக.

## சூத்திரம் *55*

குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி

(ப.ரை) குறித்தோன் - ஒரு பொருளை மனத்தில் கருதியவன், கூற்றம் - கூறும்சொல், தெரித்து மொழி - வேறு வகையால் பொருள் விளங்காத நிலையில் தெளிவாக இன்னது எனச் சுட்டி, கிளவி - கூறுக.

(வி.ரை) ஒருவன் ஒருபொருளைக் கூறக்கருதிப் பேசும் மொழி இன்னது என்று தெளிவாகப் புலப்படாதநிலையில், அப்பொருளைத் தெளிவான சொல்லால் குறிப்பிடுக. கூற்றம் கூற்று, சொல்; கிளவி வியங்கோள் வினைமுற்று, கூறுக என்பது பொருள்.

(எ.டு) ‘கன்று’ - யானை, பசு, மரம் முதலியவற்றின் இளமை சுட்டும் பெயர். கன்று பொதுப் பெயர் (சொல்) எதன்கன்று என்பது தெளிவாகாதபோது, யானையின் கன்று, பசுவின்கன்று, மரக்கன்று என்று தெரித்து (குறிப்பிட்டு) மொழிய வேண்டும் என்பது இச்சூத்திரத்தின் பொருள்.

இவ்வாறே முட்டை என்பது ஒரு பொதுச்சொல். கோழி, பறவை, மீன் முதலியவற்றின் சார்புடையது; அஃதாவது முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும் பல உயிரினங்களுக்கும் பொதுவானது. இந்நிலையில் எதன் முட்டை என்பதைக் குறிப்பிடுக் கோழிமுட்டை, வாத்துமுட்டை, மீன்முட்டை எனத் தெளிவாகக் கூறுதல்வேண்டும்.

## சூத்திரம் 56

(திணைக்குப் புறனடை) (புறனடை விதிவிலக்கு)

குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்
உயர்திணை மருங்கில் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கில் கிளந்தாங்கு இயலும்.

(ப.ரை) குடிமை நல்ல குடும்பத்தில் பிறத்தல்; ஆகுபெயராய் அக்குடும்பத்தில் பிறந்தவனைக் குறிக்கும். இவ்வாறே பின்வரும் பண்புகளும் ஆகுபெயராய் அவற்றிற்குரிய மக்களைக் குறிக்கும் என்பது அறிக. ஆண்மை - ஆண்மகன். இளமை - இளைஞன். மூப்பு - மூத்தோன். அடிமை - அடிமைத் தொழிலாளி. வன்மை - வலியவன். விருந்து - விருந்தினர். குழு - ஒரு பிரிவினர். பெண்மை - பெண்மகள். அரசு - அரசன். மகவு - பிள்ளை, குழவி - குழந்தை. தன்மை திரி பெயர் - ஆணுமின்றிப்பெண்ணுமின்றி மாறுபட்டுள்ள அலி. உறுப்பின் கிளவி உறுப்பால் பெயர் பெற்றோர்; அஃதாவது குருடன், முடவன், பெயர் பெற்றோர்; அஃதாவது குருடன் முடவன் செவிடன் எனப்படுவோர். காதல் - காதலர். சிறப்பு - சிறந்தோன். செறற்சொல் - வெறுப்பான உணர்த்தும் பெயர் .(செறல்வெறுப்பு); அஃதாவது போக்கிலி, வஞ்சகன் போல வரும் பெயர்கள். விறற்சொல் (விறல் - வீரம்) வீரன். அஅறு மூன்றும் - அவ்வாறு வரும் பதினெட்டுப் பெயர்களும் (அ நீண்டு 'ஆ'ஆனது; ஆறு அறு எனக் குறுகியது) உளப்பட தொகைஇ - உட்பட்ட தொகையோடு, அன்னபிறவும் - அத்தகை மற்றப்பெயர்களும்; அவற்றொடு சிவணி - அவற்றோடுகூடி, முன்னத்தின் - குறிப்பினால் (முன்னம் குறிப்பு) உணரும் - உணரத்தக்க, கிளவிஎல்லாம் - பெயர்கள் (சொற்கள்) எல்லாம், உயர்திணை மருங்கில் - உயர்திணைப் பொருளை உணர்த்திநின்றன என்றாலும், அஃறிணைமருங்கில் - அஃறிணைப் பொருள்மேல் நிற்பனபோலக் கருதி, கிளந்தாங்கு - அஃறிணை முடிவையே, இயலும் - பெற்று இயங்கும்.

இச்சூத்திரத்தில் குடிமை முதல் விறற்சொல் ஈறாகக் கூறப்பட்ட பதினெட்டுப் பெயர்களும் அவை போன்றன பிறவும், பொருளால் உயர்திணையை உணர்த்தினாலும், சொல்லால் அஃறிணை ஆதலால் அஃறிணை முடிவையே கொள்ளும் என்பது அறிக.

(எ.டு) குடிமை நன்று, ஆண்மை நன்று என அஃறிணை வினை முற்றுக் கொண்டு முடிந்தமை காண்க.

குடிப்பிறப்பாளன் நல்லன்; ஆண்மகன் நல்லன் என்பதே இவற்றின் பொருள். பண்பு - அஃறிணை; பண்பை உடையவன் உயர்திணை.

## சூத்திரம் 57

(பாலுக்குப் புறனடை)

காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தும் பிறவும் அன்ன
ஆவியின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந்து இசையா உயர்திணை மேன

(ப.உரை) காலம் முதல் சொல் முடிய இச்சூத்திரத்தில் கூறப்பட்டுள்ள சொற்கள் எல்லாம் அஃறிணை வினமுற்றுக்களைக் கொண்டே முடியும்; உயர்திணைக்குரிய ஆண், பெண், பலர் ஆகிய பால்களை உணர்த்தும் உயர்திணை வினை முற்றுக்கள் கொண்டு முடியா.

(வி.உரை) பால்வரை தெய்வம் - ஊழ் அல்லது விதி. பூதம் பேய், பிசாசு முதலிய தீய தெய்வங்கள். வினை - விதி. ஞாயிறு - சூரியன்; திங்கள் சந்திரன். சொல் - மொழி அல்லது வார்த்தை. வரூஉம் - அளபெடை. ஆயிரைந்து - அவ்வகையான பத்து. கிளவி - சொல். பால்பிரிந்து இசையா - உயர்திணைக்குரிய பாலை உணர்த்தா. மேன - மேலன; மீது.

(எ.டு) இவனுக்குக் காலம் ஆயிற்று, உலகம் சிரித்தது, உயிர் நீங்கியது, உடல் மெலிந்தது, தெய்வம் செய்தது, வினை விளைந்தது, பூதம் அறைந்தது, ஞாயிறு எழுந்தது, திங்கள் மறைந்தது, சொல் இனியது. இவ்வாறு ஆயிற்று, சிரித்தது முதலிய அஃறிணைக்குரிய ஒருமைப்பால் உணர்த்தி வினை முற்றுக்கள் வந்துள்ளமை காண்க.

மேலே கூறிய சொற்கள் ஆகுபெயராக முறையே காலக்கடவுள் (எமன்) உலக மக்கள் என உயர்தியா திணையாகக் கொண்டால் உயர்திணை வினை முற்றுப் பெற்று முடியும் (எ.டு) காலம் ஆனான், உலகோர் சிரிப்பர், உயிரார் அழிவர்; உடம்பார் அழிவர், இறைவன் (தெய்வம்) அருளினான், வினையேன் வருந்துகிறேன், பேயார் (பூதம்) மறைந்தார், கதிரவன் (ஞாயிறு) மறைந்தான், திங்கட்செல்வன் எழுந்தான், சொல்லோன் நல்லன் (பண்பையுடையவர் பண்பிகள்) கருதப்படின் உயர்திணை முடிவைப்பெறும்.

## சூத்திரம் 58

நின்றாங்கு இசைத்தல் இவணியல் பின்றே

(ப.ரை) நின்றாங்கு இசைத்தல் - மேலே கூறப்பட்ட சொற்கள் அப்படியே நின்று உயர்திணையில் வழங்குதல், இவண் இயல்பு இன்று - இங்கு இயல்பில்லை.

(வி.ரை) குடிமை முதலான சொற்களும், காலம் முதலான சொற்களும் உயர்திணை முடிபினைப் பெறமாட்டா என்பது வலியுறுத்தப்பட்டது.

எடுத்துக்காட்டுகள் மேலே கண்ட முன் இரண்டு சூத்திர உரைகளில் தரப்பட்டனவே.

## சூத்திரம் 59

இசைத்தலும் உரிய வேறிடத் தான

(ப.ரை) இசைத்தலும் உரிய - காலம் முதலிய சொற்கள் உயர்திணையாக வழங்கவும்படும், வேறிடத்தான - அச்சொற்களின் ஈற்றில் உள்ள எழுத்துக்கள் மாறி உயர்திணையாக வரும்இடத்தில்

(வி.ரை) வேறிடம் சொற்களின் இறுதியில் உள்ள எழுத்துக்கள் (எ.டு) காலம் என்பதன் ஈற்றெழுத்தாகிய 'ம்' என்பது 'காலன்' என்று 'ன்' பெற்று நிற்பின் உயர்திணையாகும். இவ்வாறே பிறசொற்களையும் கொள்க. விளக்கம் மேலே கூறப்பட்டது.

## சூத்திரம் 60

எடுத்த மொழிஇனம் செப்பலும் உரித்தே

(ப.ரை) எடுத்த மொழி - சிறப்பாக எடுத்துக் கூறப்படும் பொருள் அல்லது கருத்து, இனம் செப்பலும் - தனக்கு இனமான பிறிதொரு கருத்தைக் கூறலும், உரித்து - உண்டு. (ஏ அசை)

(வி.ரை) செப்பல் - கூறுதல். எடுத்தமொழி பலவற்றுள்ளும் சிறப்பாக ஒன்றனை மிகுத்துக்கூறல். 'செப்பலும்' என 'உம்' ஐ கொடுத்துக் கூறுதல் செப்பாமையும் உண்டு என்பது பெறப்படும்.

(எ.டு) இனி, அரசன் வாழ்க என்றால் அரசனல்லாதார் வீழ்க எனப் பொருள்படாது. இது இனம் குறிக்கவில்லை. சோறு உண்டான் என்று கூறின், காய்கறியும் உடன் உண்டான் எனத் தனக்கு இனமானவற்றை உணர்த்துவதும் இதனுள் அடங்கும்.

## சூத்திரம் 61

(எண்ணுக்கு விதிவிலக்கு)

கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறும் கடப்பாடு இலவே
தம்வினைக்கு இயலும் எழுத்தலம் கடையே.

(ப.ரை) கண்ணும், தோளும், முலையும் இன்ன பிற உறுப்புக்களும் பன்மையைக் (ஒன்றுக்கு மேற்பட்டதை) குறித்துவரும் உறுப்பின் பெயர்களாகும். ஆனாலும், இவை பன்மைப் பாலில் கூறப்படுவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஏனெனில், இவை பன்மை வினைமுற்றுக்குரிய எழுத்துக்களை இறுதியில் பெற்றிருக்கவில்லை.

(வி.ரை) தம் வினைக்கு - பன்மை வினைமுற்றுக்கு. இயலும் - பொருந்தும்படியான. அல், அம், கடை இவை அசைச்சொற்கள். கடப்பாடு கட்டாயம். சினை உறுப்புக்கள்.

(எ.டு) கண் உறுத்திற்று, தோள் பருத்தது என ஒருமைவினை முற்றுக் கொண்டே முடியும். இவ்வாறின்றி 'கள்' என்றும் பன்மை விகுதியைப் பெற்றுக் **கண்கள்**, தோள்கள் முதலியனவாக வந்தால் கண்கள் உறுத்தின, தோள்கள் பருத்தன எனப் பன்மை வினைகொண்டு முடியும். பிறவும் - காது முதலியனவும்.

( தொடரும் . . )

# அபிராமி அந்தாதி
# ABIRAMI ANTHATHI

**பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி**

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணியிங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே!

Oh my heart! It is the fruit of our past tapas
That Mother Abirami of kuvalai-like charming eyes
And her red-complexioned spouse condescended
To come to our resene and caused us
To be amidst their humble servitors
And blessed us by crowing our heads with their lotus- feet! (41)

இடங்கொண்டு விம்மி இணைகொண் டிறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலிய நெஞ்சை
நடங்கண்ட கொள்கை நலம்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே

Sweet-worded Abirami wears the Vedas as her anklets;
Her forelap resembles the cobra's hood;
That chaste and beauteous mother has hill-like breasts
Adorned with garlands of pearls;
They are broad-based, swelled, stiff and mellowed;
Aided by them, She succeeds in melting

Even the strong heart of the Lord
And causes Him to dance to Her tunes! (42)

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை பஞ்ச பாணி இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியார் தீமை நெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத் திருந்தவளே!

Abirami's pretty feet are adorned with anklets
And Her sacred hands hold the noose and the five darts of flowers;
She is the sweet-worded Thiripurasundari
Who is hued like the chenthura powder;
She occupies the left half of Lord Shiva
With fire-like complexion, who bent
The Meru mount as bow and annihilated
The trinity of castles of the merciless Asuras! (43)

தவளே யிவள்; எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையும் ஆயினாள்; ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்;
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு செய்தே!

Mother Abirami attained the lord as her spouse by Her tapas;
She who is the auspicious spouse of the lord
Is in a way His mother too;
She is the supreme head of all Celestials!
Except to do service to Her,
I will no more suffer in search of another deity! (44)

தொண்டு செய்யாதுநின் பாதந் தொழாது துணிந் திச்சையே
பண்டுசெய் தார் உளரோ இலரோ அப்பரி சடியேன்
கணடு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கை யன்றே!

were there not men in the past
Who lived as they pleased
Neither doing service to Thee
Nor worshipping Thy sacred feet!
Should I too emulate them,
Will it be deemed sinful or an act equal to tapas?

Should I, out of ignorance commit mistakes,
To forgive me is good on Thy part
And to hate me is undesirable! (45)

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புதுநஞ்சை யுண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே!

Gold-like mother abiding in the left half of the lord
Who once betook the new-born poison
And got His throat stained!
The great ones tolerating the lapses of their humble servants
Is nothing new!
Even if my acts provoke your displeasure,
I will continue to adore Thy feet!
(with the hope Thou will tolerate them) (46)

வாழும் படியொன்று கண்டுகொண்டேன் மனத்தே யொருவர்
வீழும் படியன்று; விள்ளும் படியன்று; வேலை நிலம்
ஏழும் பருவரை யெட்டு மெட்டாமல் இரவு பகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே!

I've discovered a thing which will bless me with eternal life!
It is a thing beyond human comprehension;
It defies all verbal description
And is beyond the sevenfold world, the sevenfold sea and the eightfold mountain!
It glows amidst the sun and the moon
That make the day and night respectively. (47)

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப்பார் பின்னும எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே!

Abirami is the green and fragrant liana
Which creeps over the mount (Shiva)
Whose peak is the matted hair adorned with the baby moon!
Those devotees who treasure Her in their mind and contemplate
For a while will kick off all grief

And will not enter again
The base hut wrought of entrails, fat and blood! (48)

குரம்பை யடுத்துக் குடிபுக்க ஆவிவெம் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகு மப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்ச லென்பாய்
நரம்பை யடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே!

Supreme Mother! Thou art the embodiment of the sweet veena melody!
May You drive out my fear
With a smigle gesture of Thy bangled hand
Coming to my rescue surrounded by Ramba and others
At the destined moment when the heartless Death torments
My life that took shelter in this body! (49)

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
தாயகி யாதி உடையாள் சரணம் அரண் நமக்கே!

Abirami my mother is the ruler of the entire world;
She is the four-faced one;
She is Narayani; in her lotus-hands She holds
The five flower-darts; She is Shyamala and Sambavi;
She is the wielder of the disc;
She adorns herself with a serpent of deadly poison;
She is Varaki, Mathangi and the wielder of a trident!
We have asylum none but Her sacred feet! (50)

# பொன்பாண்டித்துரைத் தேவர் பாடிய காவடிச்சிந்து

**(96 மே இதழ்த்தொடர்ச்சி)**

தோகையேயுன தாகமேவிடு போகவிடு போகமே
(கனயோகமாமெனச்
சோர்விலாது செய்தான் பல லீலையேயெவர்
தேருவார வன்போல்மத நூலையே (4)

**தோழி தலைவி நிலை கூறித்தலைவனை வேண்டல்**

தேவரை யாள்கரு ணாகரா - துஷ்டர்
சேனையை வாட்டுந் திவாகரா - உயர்
தெய்வானை வள்ளி மனோகரா - நல்ல
திகழ்தாமரை நிகராகிய தகுசேவடி புகலாயடை
தீனர்க ளுக்கனு கூலா சிவ
ஞானபு ரத்துறை வேலா.

பூவளர் நான்முக னாதியே - யான
புங்கவர்க் காரண மோதியே - ஐயம்
போகவி ளக்கிய சோதியே - உயர்
புனிதாமுன மினிதாகிய கனிதாவென நனிதாதைதன்
புந்திம கிழுவித் தோனே - பல
வந்தனம் யான்புரிந் தேனே.

மஞ்சுநி கர்க்குமெல் லோதி - சிறு
வாணுதல் திங்களின் பாதி - குழை
வார்செவி வள்ளையின் ஜாதி - கதிர்

வடிவேல்விழி துடிநூலிடை பிடிவாரண மடிசேர்நடை
மாமலை யாமிரு கொங்கை கொண்டுன்
வாகனம் போல்வரு மங்கை.

வஞ்சியை நேரிடை மாது - நேற்று
மாலையில் நீ வரும் போது - கண்டு
மையல் கொண் டாளுன்றன் மீது - கான
வலைமானிகர் விழியாளணி கலைசோரவு முலைமீறவு
மாரன்க ணைசகி யாது - சென்று
கூறவெ னைவிட்டாள் தூது

திங்களுஞ் செங்கதிர் போலுமே - வந்து
செந்தழல் தூவுமென் மேலுமே - சற்றுந்
தேட்டமில் லையன்னம் பாலுமே - மலர்
செழுமங்கையி னகுபைந்தொடி நழுவும்படி மிகநைந்தனள்
சீறிவ ரும்புலி போலே - மந்த
மாருதம் வீசுத லாலே.

கொங்கைக்கு டங்களைப் பிடித்தே - முத்தங்
கொஞ்சியி ருகன்னங் கடித்தே - கனிக்
கோவையி தழ்த்தேனைக் குடித்தே - நன்றாய்க்
கூடிப்பல விதலீலைகள் நாடித்தரு மதனூலது
கூறுமு றையேசம் போகம் - செய்தால்
தீருமவள் கொண்ட மோகம்.

பக்கத்தில் வந்தோரை யேசுவாள் - வெல்லப்
பாகுங்க சப்பென்று பேசுவாள் - சொந்தப்
பாங்கிக்கும் மெய் சொல்லக் கூசுவாள் - உயர்
பலமாமர மிலமாயுறை நலமார்குயி லொலிவார் செவி
பட்டிடுங் கூரிய பாணமே - யென்று
விட்டொழித் தாள்கொண்ட நாணமே.

இக்கும தன்கணை மாரி - பல
எய்திடக் காமப் பித்தேறி - செயல்
யாதும றந்தாளிந் நாரி - அங்கு
ஏயுங்கனி வாயன்புட னீயுந்தனி யாய்வந்திடில்
இன்பமு டன்கலந் துய்வாள் - சொல்லும்
முன்புநி னைந்தது செய்வாள், (5)

மகட்குச் சங்கைக் குணமெனக் கருதி வெறியாடத் துணிந்த நற்றாய்க்குத் தோழி, தலைவியின் முன்னிகழ்வு கூறி வெறிவிலக்கல்

வாவிக்கமல விழி யாளே - ஒரு
வார்த்தை யுரைப்பனது கேளே - உன்றன்
மங்கை தனக்குவேறு சங்கைக் குணமுண்டென்று
மாதே நினை யாதே.

மேவித் தலைக்கடையில் நின்றே - சற்று
வேட்கைக்கு நீருதவு மென்றே - வீட்டில்
மெல்லப்பு குந்துமாதைப் புல்லியே சென்றானடி
வேலன் உமை பாலன்.

வல்லிக்கி சைந்தமண வாளன் - நம்மை
வாழ்விக்க வந்தருள் தயாளன் - உயர்
வாகை யுயர்ந்தசிவ ஞானபு ரத்தினிய
வாசன் கும ரேசன்.

நல்லத ரத்தமுதை நாடி வந்தேன்
நல்குமெ னவேயுரை யாடி - அன்று
நண்ணுமு ருகனைக்கண் டெண்ணிமிக வும்மனம்
நைவாள் என்ன செய்வாள்

கன்னிக்கொ ருதுயர மேது காமக்
காய்ச்சலி னால்மெலிவல் லாது என்றும்
களிக்கும் வேலன்மகிழ்ந் தளிக்கும் பூதியுப
காரம் இந்த நேரம்

அன்னநிகர் மென்னடை மாதே - வீணில்
ஆட்டைப்பி டித்துவருத் தாதே - இங்கு
ஆசைக்கு ருபரனை யேசற்ற ழைத்துவரில்
ஆமே துயர் போமே.

இன்பந்த ருங்கவிவல் லோரும் - மலர்
இலகுங்கொ டியுமங்கை மாரும் - மிக
ஏலுஞ் சார்பையடைந் தாலல் லால்மகிமை
யேது சொல்லிப் போது

அன்பொடு நீசெய்தவந் தானே உனக்
காகிப்ப லித்ததடி மானே - நங்கை
ஆகம்ம ருவக்குகன் மோகமொ டுவிரும்ப
லாச்சே என்ன பேச்சே. (6)

## தலைவி யொழுக்கில் ஐயுற்று நற்றாய் தலைவியைக் கடிதல்

ஏதடி பூங்குழன் மாதர சேயுனக்
கீது நல்ல மதியோ - பிறர்
ஏசி யிகழ்ந்துனைச் சீசீ யெனும்படி
யே செய்வதுன் விதியோ

ஆதர வாயொரு நாதனைத் தேடிக்கல்
யாணஞ் செய்யு முன்னமே - யன்பர்
ஆனவர் சேர்சிவ ஞானபு ரேசனை
அங்கே தொட்ட யன்னமே.

நாட்டிலுள் ளாரிதைக் கேட்டிடின் மெத்த
நகைப்புக்கிட மாச்சே - யொரு
நாளாகி லும்மினி மீளாது சேரும்
நமக்குமிகலூ ச்சே.

மோட்டு மதகரிக் கோட்டிளங் கொங்கை
முழுதும்நக வரியே - கட்டி
முத்தங்கொ டுத்தகன் னத்தினிற் காணுதம்
முன்னவன்பற் குறியே.

சேவற்கொ டியோன்மே லாவலி, ருந்தாலுஞ்
சேருந்ததி யீதோ - சற்றே
சிந்தித்துப் பாருன்றன் தந்தைத மையன்மார்
செய்தி தெரியாதோ.

மேவிய காமிக ளானவர்க் கச்சமும்
வெட்கமும் நண்ணாதே - யென்முன்
வேண படிக்கெல்லாம் வீணாகப் பேசி
மிரட்டிட வெண்ணாதே.

மெத்தந றுங்கள பத்தின் பரிமளம்
மேனியெல் லாம்வீசுதே - யிந்த
விந்தையை யெங்கே படித்தாய் நீயென்று
விளம்பவும் வாய்கூசுதே.

சூத்திர மாதரி னத்தைவிட ரதுகைக்
கொள்ளுகி றாய்வீம்பே - அனு
கூலம்ப ழிக்கெல்லாம் மூலம் குலத்துக்கோர்
கோடரி யின்காம்பே.

சாதனை செய்யவொண் ணாதிரு கண்களும்
சாலச்சி வந்திட்டதே - அடி
தையலே யுன்னிதழ் செய்ய கரத்தணி
சங்குபோ லாய்விட்டதே.

மாதரி ருவரைக் காதலித் தாளும்
வடிவேல னுன்மீதே - யின்று
மையல்கொண் டாலும்நீ மெய்யுற வென்று
மதித்திட லாகாதே" (7)

### கலவிவேட்ட தலைமகனுக்குத் தலைவி செவ்வியருமை கூறி வரைவு கடாதல்

தேனிரைந்திசை பாடுவண்டினம்
சேர்கடம்பணி தோளா - அன்பர்
சிந்தைமேவிய தாளா - வள்ளி
தெய்வயானை மணாளா - உம்பர்
சேனையாள்சின ஞானமாபுரி
திகழுந்தின தயாளா.

கானகந்தனி லேநடந்திடு
கால்தளர்ந்ததி தூரம் - பெருங்
காதலாலந்த காரம் - மிகுங்
கங்குலாகிய நேரம் - தனிற்
கருதிவந்தெனை மருவினாலதைக்
காணில்மெத்த விசாரம்.

பாதிமாமதி வேணியார் தரு
பாலனே பல காலே - இங்கு

சாலவே ழையர் போலவே - யிந்தப்
பாழுங்கான் வழி மேலே - வந்து
பாவியா மெனை மேவினா லதைப்
பழிக்கு மூரறிந் தாலே.

வேதனைக்கிட மாகுதேவடி
ேவலாநீ கொள்ளும் மோகம் - அதில்
விளையுந் துன்பம் னேகம் - எங்கள்
வீட்டில் யார்க்குஞ்சந் தேகம் - இனி
வேணுமரகிற்கல் யாணஞ்செய்து பின்
மேவலேநல்வி வேகம்.

கொஞ்சிவாழவும் நெஞ்சிலே பயம்
கொள்ளுதே யினி நீயும் - வரக்
கூடுமோ கிழப் பேயும் - துயில்
கொண்டிடாள் கடு நாயும் - கண்டு
குலைக்குமென்றுளம் மலைக்குதே மிகக்
கோபியாம் பெற்ற தாயும்.

தஞ்சமென்றவர் சஞ்சலந் தவிர்
சாமிநீ யிந்த ஜாலம் - செய்யத்
தகுதியோ சில காலம் - சென்று
சார்வதேயனு கூலம் - கிணறு
தங்குதண் புனல் பொங்கு
தப்புமோ வெனும் ஞாலம்.

தூயவாரிதி மேய வாலிலை
துஞ்சுமால் மரு கோனே - இதற்
கஞ்சினேன் மிக நானே - உனைக்
கெஞ்சியே புகல் வேனே - யிந்தத்
தொல்லை தீரவே றெல்லைவா வெனச்
சொல்லினும் புரி வேனே.

காயுஞ் சூரனை மாய நூறிய
கர்த்தனே யென்றன் மீது - கோபங்
காட்டியே கவொண்ணாது - இன்று
கலவி செய்யத்த காது - என்றுங்
கருத்திலே தய விருத்தல் வேணுநற்
காலம் வாராதி ராது. (8)

## தலைவன் தலைவிபாற் குறையிரந்து நிற்றல்

வண்ணக்கருங் குழலாளே எழிலாளே மதவேளே - பொழி
லாளிகளுக்குநா னாளே ஆகி
மனநொந்திடல் தவிரும்படி முனம்வந்தெனை யருள்
கொண்டணை,
வாடியடி யுன்னிரு தாளே தஞ்ச
மாயடை வேனிந்த நாளே.

கிண்ணத்தனத் தாயிப்போது இந்தவாது செய்வதேது - என்பாற்
கிஞ்சித்தும் நெஞ்சுரு காதுபசுங்
கிளியேநனி களிவாவென எளியேனிடம் ஒளியரதுரை
கெஞ்சிடு மென்சொலுன் காது களில்
கேட்கவில்லை யோசற் றோது.

வள்ளத்திலேநிறை பாலும் தேனும்போலும் சுவைசாலும் - மொழி
மாதேநீ யேதெண்ணி னாலும் உன்றன்
மனதின்படி புரிவன்பல பணியுங்கடி மலருங்கொண்டு
வாவெனவே பகர்ந் தாலும் கொண்டு
மேவுவன் சொல்லுமுன் னாலும்.

எள்ளத்தனையும் விஸ்வாசம் மனநேசம் என்மேற் பாசம் - இல்லா
தேன் செய்கிறாய் பரிகாசம் இனி
இலகும்பல மலரம்புகள் கலகம்புரி மதனுஞ்சிறி
தெய்திடி லோபெரு மோசம் பெண்ணே
செய்ததாரிவ்வுப தேசம்.

( தொடரும் )

# பாடுபொருள் நோக்கில் ஒப்பாய்வுக் களங்கள்

பேரறிஞர் கதிர். மகாதேவன்.

'பாடுபொருள்' என்பது இன்றைய நிலையில் பரந்துபட்டதொரு தலைப்பாகும். இன்று எதையும் பாடலாம். எப்படியும் பாடலாம். என்ற முன்னேற்றம்! இதற்குரிய வகையும் தொகையும் எதிர் காலத்தில்தான் ஏற்படவேண்டும். இன்று சிலர் இதற்கு இலக்கியக் கொள்கைகள் கூறலாம்; விளக்கங்கள் தரலாம்; ஆயின், இவை நின்று நிலைக்குமா என்பது ஐயத்திற்குரியது.

## இன்பம் நாடும் களம்

இலக்கியக் கொள்கைகள், இலக்கிய வகைகள் எங்ஙனம் உலகெங்கினும் ஒப்பாய்வுக் களங்களாக உள்ளன என்பதைப் பருந்தின் வீழ்வாகக் காட்டுவதே இக்கட்டுரை.

மனிதன் இன்பத்தை நாடி, ஓடி, தேடி அலைகிறான்; அதிலுள்ள துன்பங்களே இன்பத் துணையாகின்றன.

எனவே, பழந்தமிழன் இன்பத்தை நாடுபொருளாகவும், பாடுபொருளாகவும் தேடுபொருளாகவும் ஊடுபொருளாகவும் வைத்துப் பாடலானான், இதன் அடிப்படையில்தான் பண்பாட்டு ஒருமைப்பாடும் வேறுபாடுகளும் தோன்றின. ஒப்பீட்டு நோக்கில் பார்க்கும்போது ஒற்றுமைக்குரிய காரணங்களையும் வேற்றுமைக்குரிய காரணங்களையும் தேர்ந்து தெளியலாம்.

முருகியல் இன்ப ஒப்பீட்டில் காணும் போது, இன்ப உணர்வுகள் உலகு எங்கிலும் பொதுவானவை என்பதை அறியலாம். 'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்' என்பதால் தொல்காப்பியர் இன்பம் என்பது ஏதோ பருவமும் உருவமும் வந்தால் வரும் என்று எண்ணவில்லை! உயிர் தோற்றும்போது இன்பமும் உடன்தோற்றுகிறது என்றார். இக்கருத்தைப் பிற்காலத்துப் பிராயிடு கூறுகிறார். இன்பம் இயற்கையானது, பாலுணர்வு உயிர் தோன்றும் காலத்தே உடன் தோன்றியது என்பர். இப்பின்னணியில் இன்பத்தைப் பாடும் புலவர்கள் காதலைக் கருவாகவும் உருவாகவும் வைத்தனர். இயற்கையே காதலுக்குப் பாடமாகவும் பின்னனியாகவும் ஆனது.

## முருகியல் இன்ப ஒப்பீடு

காதற் பாடல்களில் கொள்கைகள் வகுத்தவர்கள் உண்டு. இப்படித்தான் காதலைப் பற்றிப் பாடவேண்டும் என்று கோட்பாட்டைத் தொகுத்தவர்கள் உண்டு. இவற்றை ஒப்பிட்டு நோக்கினால், காதல் பாடல்களில் செப்பம் இனிது புலப்படும்.

காதல் தத்துவத்தை உணர்ந்தவர்கள் கவிஞர்கள் எனலாம். உளவியல் அறிஞர்கள் கண்ட கருத்துக்கள் காதல் கவிதையோடு பெரிதும் இயைபுடையவனவாக உள்ளன.

காதல் உணர்வு எக்காலத்தவர்க்கும் எந்நாட்டவர்க்கும் ஒன்றுதான். முருகியல் இன்ப நோக்கில் காணும்போது காதல் பாடுபொருளாலும நோக்காலும் இயற்கையின் எதிரொளியாகக் காணப்படுகின்றது.

சான்றாக இரு காதல் பாடுபொருள் அமைந்த கவிதையைக் காண்போம். இவ்விரு கவிஞர்களும் இருவேறு நாட்டினர்; இருவேறு மொழியினர்; இருவேறு காலத்தினர், ஆயின், இயற்கை மாறவில்லை; கவிஞர்கள் முருகியல் இன்பக் கருத்தும் பாடுபொருள் நோக்கும் மாறவில்லை.

எங்கோ தோன்றிய பெண் வேறெங்கோ தோன்றிய ஆணுடன் இரண்டறக் கலக்கிறாள்!

காதல் தத்துவத்திற்கு இப்பாடல்களில் இயற்கை நாடும் பொருளாகிறது. இப்புலவர்களில் ஒருவர் மேலைநாட்டினர். செல்லி (Shelly PB)எனும் பெயரினர். அவர் புனையும் காதல் தத்துவப் பாடல் வருமாறு:

The fountain mingles with the river
And the rivers with the Ocean;
The winds of Heaven mix for ever
With a sweet emotion;
Nothing in the world is single
All things by a law divine
In one anothers being mingle
Why not I with thine

- P.B. Shelley

"அருவி ஆற்றுடன் கலக்கும், அலைகடல்
ஆற்றினை ஏற்று மகிழும்
மருவி வீசும் காற்று இழைத்து
கருவி வானில் குழையும்
பெருகும் இன்பம் உயிர்கள் தனியே
உருகிப் பெறுவ தில்லை!
நெருங்கும் இன்பம் நியதி யெனில்
நின்னுடன் யானுறவாட லாமே?

- பி.பி. செல்லி

## காதலை உணர்த்தும் இயற்கை

இயற்கையைப் பாடுபொருளாக்கிக் காதல் தத்துவத்தை ஊடுபொருளாக விளக்குவதைக் காண்கிறோம்.

முன்பின் அறியாத காதலர் நெஞ்சங்கள், வானத்தில் கருக்கொண்ட மழைநீர் செம்புலத்தில் பெய்த போது உருமாறி இரண்டறக் கலந்து காட்சி அளிப்பது போலக் கலந்தன என்பதை,

யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே"

- குறுந்தொகை

பாடுபொருளால் கவிதை கவின் பெறுகிறது என்றால், பாடுபொருள் வகையிற் "காதல்" முதலிடம் பெறுகிறது.

உலகில் காதலைப் பாடாத நாடில்லை! காதலை நாடாத புலவரில்லை! இன்பத்தில் ஈடுபடாத உயிரினம் இல்லை!

ஆனால், புலனின்பம் பண்பாட்டிற்கு அடிப்படையாவதால், இனங்களிடையே காதல் நாகரிகம் வேறுபடுகிறது. இதனை உணர்த்தவே ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்க் கபிலன் குறிஞ்சிப் பாட்டு இயற்றினான்.

காதல் பாடுபொருளில் ஒப்பாய்வுக் களமாகக் குறிஞ்சிப்பாட்டுத் தோன்றியது எனலாம்.

செல்லியின் காதற் பாடலுக்கும், அகப்பாடலுக்கும் வடமொழிக் காதற் பாடல்களுக்கும் பாடுபொருள் ஒன்றானாலும் கொள்கைகள் வேறுபடுகின்றன.

அஃறிணையிலிருந்து ஆண்டவன் வரை காதல் பாடுபொருள் களமாவதைக் காண்கிறோம். ஒப்பீட்டு நோக்கில் இதன் உண்மைகளையும் நுண்மைகளையும் காண்போம்.

விலங்குகளின் பாலுணர்வை இழித்தும் பழித்தும் பேசுவது மனிதனுக்கு வழக்கமாகிவிட்டது. ஆடு மாடுகளைப் போலக் கொள்கை இன்றி மனிதன் வாழ்வதைக் குறைகூறுவது பழக்கமாகி விட்டது.

ஆனால், உண்மையில் விலங்குகள் பாலுணர்வைத் தேடும் திறம் (Sexual Selections) வியக்கத்தக்கவை. மனிதனே கற்பித்துக் கொண்ட உறவு முறைகள் வேண்டுமானால், விலங்குகளிடையே இல்லை. இயற்கையின் அற்புதங்கள் விலங்குகளிடையே ஒரு நியதியைக் கற்பித்துள்ளன என்பர் உயிர்நூல் வல்லார்.

## மரபும் கொள்கையும்

காதல் பற்றிப் பாடுபொருள் மரபுகளை ஒப்பிட்டு நோக்கும்போது புலனின்பம் குறித்த கொள்கைகள் புலனாகின்றன. புலனின்பத்தை நெறிப்படுத்தத் தமிழர் முற்காலத்தில் பாடுபொருள்

மரபுகளை ஏற்படுத்தினர் எனலாம். ஆனால் பிறமொழி இலக்கியங்களில் முறையற்ற மனிதனின் உணர்ச்சிகள் சிலபல இடங்களில் காட்டப்பட்டன என்றாலும் அவை கடியப்பட வேண்டியவை என்பது ஒப்பீட்டு நோக்கால் உணர்கின்றோம். இதில் கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம்; கருத்து வேறுபாடுகள் தோன்றலாம்; கொள்கைகளில் உயர்வு தாழ்வு கற்பிப்பதைவிட, வாழ்வு முறைகள் மாற்றப்பட வேண்டியவை; அவ்வாறு மாற்றப்படாவிடில் நிகழும் குறைபாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டி நேரிடும். இதனை உணர்ந்தே பழந்தமிழில் காதற் பாடல் கொள்கைகளைப் படைத்தனர். இவைகளை இலக்கியக் காதற் பாடல்களில் பாடுபொருள் கொள்கை மரபுகளா கொண்டனர். மரபு மாறுவதும், மீறுவதும் உலகத்து இயற்கை; எனவே, பழந்தமிழ்க் கொள்கையைப் பழங்கதையாயிற்று என்று கூறல் ஏற்புடைத்தன்று. ஒவ்வொரு காலச் சூழலும் ஆராயப்பட வேண்டியது இன்றியமையாததாகும். காலத்தாலும், இடத்தாலும், சூழலாலும், இனமரபுப் பண்புகளாலும் கொள்ளத் தக்கன என்றும் தள்ளத் தக்கன என்றும் பிரிக்கலாமல்லவா?

## இன்பத்தின் மூலப்பொருள்

இன்பத்தின் மூலப்பொருளாகக் காதல் எல்லாக் காலங்களிலும் எல்லா இலக்கியங்களும் ஏற்றுக் கொள்கின்றன. இன்பம் காதலைத் தஞ்சமாகக் கொண்டு திகழ்கின்றது. கவிஞர் இரவீந்திரநாத தாகூர், பெண்ணின் நெஞ்சமே, காதல் மஞ்சம் என்பதைக் குறிப்பில் கூறும்போது, "ஓராயிரம் ஆண்டாயினும், நன்று! நன்று!.... ஒருத்தியின் நெஞ்சத்தைக் கொள்ளை கொள்ள" என மானசச் சுந்தரி என்ற கவிதையில் இவ்வுணர்வைக் காட்டியுள்ளார்.*

மனித இனத்தில் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு காதல் பாடுபொருள் கொள்கைகள் இருந்தன. புலனின்பம் துய்த்தல்

---

* ...... "a thousand years effort is worthwhile to win a woman's heart"
- **Rabindranath Tagore**

எவ்வாறு இலக்கியத்தில் எதிரொளிக்கிறதோ அதற்கேற்ப அந்நாட்டின் பண்பாட்டினை உணரலாம்.

பிண்டர் என்பவர் கிரேக்கர் காதற் பாடல் பாடுபொருளின் கொள்கை, "இன்பத்தை மையமாகக் கொண்டது" என்கிறார்.* பெருமித வாழ்வு அக்கொள்கையோடு கூட்டி எண்ணப்பட்டது. இவ்விரண்டும் இணையும் சிறப்பே உயர் வாழ்க்கையில் முடிசூடும் பேறாகக் கருதப்பட்டது.

'காதலித்ததை அடைவதே கிரேக்கர்தம் வாழ்வின் எண்ணமாகக் கொண்டனர்' என்று தியோகிசு கூறுவது இவ்வின வரலாற்றை நோக்கும்போது பெண், மண், பொன் என்ற மூன்றையும் அல்லது மூன்றில் ஒவ்வொன்றையும் காலச் சூழலுக்கு ஏற்பக் காதலித்தனர் என்று தெரிகிறது.

பர்க்கார்ட் என்பவர் கிரேக்கப் பண்பாட்டுக் கொள்கை வளர்ச்சியைப் பற்றிப் பல தொகுதிகள் எழுதியிருந்தாலும், ஒரு பாலின உறவையும் ஆண், பெண் உறவையும் வேறுபடுத்தவில்லை. தியோகினிஸ் என்ற கிரேக்க அறிஞர் ஆண்பால் ஓரினக் காதலைக் கூறுகிறார்.

கிரேக்கக் கவிஞர் எல்லாம் அழகையும் காதலையும் வாழ்க்கையின் நாடுபொருளாகவும் காதற் பாடல்களில் பாடுபொருள் கொள்கையாகவும் கொண்டனர்.

"நிலையிலா மனிதனுக்கு உலைவிலா
முதல் நலம் உடல் நலமாகும்
உடனடுத்திடுவது மேனியழகாம்;**

---

* According to Pindar, happiness is the first object to be striven for, the second is an honourable reputation; he who has met with a holds fast to both has found the highest crown.

**- Sexual life in Ancient Greece.**

** "Best for mortal man is health;
Second best, is charming personal beauty.
Third wealth obtained without fraud
To be young among'st one's friends"

இந்தக் கருத்துக் கொள்கை, கிரேக்கர் வாழ்விலும், பாடல்களிலும் எதிரொளித்தன.

இந்தக் காதற் பாடல் பாடுபொருள் கொள்கை பழந்தமிழில் உண்டு.

இன்பம், இளமை இவை இரண்டும் ஒன்றின் ஒன்று ஒட்டும் உறவும் உடையன. பொருளை விட இன்பம் முதலிடம் பெறுவதைப் பழந்தமிழில் காணலாம்.

"இவ்வுலகத்து நாள்தோறும் வில்லினின்று
எய்யப்படும் அம்பு சென்று
இலக்கை அடையும் கால அளவையின்
அவ்அம்பின் நிழல் எவ்வண்ணம்
விரைவிற் சென்று அழியுமோ
அவ்வண்ணம் இன்பமும் இளமையும்
கழியும். அதனை அறிந்தும் பொருளை
நாடித் தேடிச் செல்லும் தலைவன்
நிலை நன்றன்று என்று
தலைவியின் கருத்து நோக்கித் தோழி கூறுவதை,
''வைகல் தோறும் இன்பமும் இளமையும்
எய்கணை நிழலிற் கழியுமிவ் வுலகத்து
... ... ... ... ... ... ...
எவ்வ மிகஉம் அருஞ்சுரம் இறந்து
நன்வாய் அல்லா வாழ்க்கை
மன்னாப் பொருட்பிணிப் பிரிதும்யா மெனவே"

- *நற்.46*

என இளமையின் அருமையையும் இன்பத்தின் சின்மையையும் பாடுபொருளில் ஊடு பொருளாகத் தருகிறாள்.

பிறிதொரு பாடலில், இளமை இன்பம் தருமா பொருள் வளமை நல்குமா என்ற வினாவைக் கருத்தில் கொண்டு,

"இறந்துசெய் பொருளும் இன்பந் தருமெனில்
இளமையின் சிறந்த வளமையும் இல்லை
இளமை கழிந்த பின்றை வளமை
காமந் தருதலும் இன்றே அதனால்
நில்லாப் பொருட்பிணிச் சேறி
வல்லே நெஞ்சம் வாய்க்கநின் வினையே"

- *நற்.126*

என்று இளமை இன்பத்தை முதலிலும் பொருள் நசையை அடுத்தும் காட்டியிருப்பதைக் காணலாம்.

கிரேக்கப் பாடற் கொள்கையில் இரண்டாவதாக அவர்தம் கூற்றுப்படி மூன்றாவதாகக் கூறப்படும் கொள்கை,

"வஞ்சனை இல்லா வளமைச் செல்வமாம்"
(Third, wealth obtained without fraud)

என்று ஆல்ஸ் லிசெட் குறிப்பிடுகிறார்.

இந்த ஒரு வரியில் இரு கொள்கைகள் புலப்படுகின்றன. ஒன்று, **பொருள்**; பிறிதொன்று **அறம்** ஆகும். அறவழியில் ஈட்டிய அரும் பொருள் இன்பத்திற்கு வழிகாட்டும் எனும் கருத்தும் பழந்தமிழ்க் காதற் பாடல்களில் பரக்கக் காணலாம்.

பொருளை இருவகையில் திரட்டலாம், ஒரே நாளில் ஆறலை கள்வர் போலக் கொள்ளை இடலாம். கடத்தற்கரிய பாலையைக் கடந்து கிடைத்தற்கரிய பொருளை அரிய முயற்சியால் ஈட்டுதல் என்பதை,

"கல்சேர் சிறுநெறி மல்கத் தாஅம்
பெருங்காடு இறந்தும் எய்தவந் தனவால்
அருஞ் செயல் பொருள்"

- *நற்.133.*

என்ற வரிகளில் 'அருஞ்செயல் பொருள்' என்பது கிரேக்கத் தத்துவமாம் 'வஞ்சனை இல்லாப் பொருள் வளம்' (Wealth obainted without fraud") என்பதைக் குறிக்கும்.

கிரேக்கக் கவிதைகளில் காணப்படும் புகழ்க்காதல் பழந் தமிழருக்கும் உண்டு. எனவே,

"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்மென"

- *நற்.214*

என்று கருவூர்க்கோசனார் கூறுவர். என்றாலும், பழந்தமிழில் இன்பத்திற்கே முதலிடம், பொருளுக்கு இரண்டாம் இடம்; அறம் எனப்பட்டது இன்பத்திற்குக் காப்பாக அமைதல் வேண்டும். இக்கருத்து,

பூங்கண் இருங்குயில்
கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கைவிட்டு

அகறல் ஓம்புமின் அறிவுடை யீரெனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல
.... ...: .... .... பொருள்வயின்
பிரிதல் ஆடவர்க்கு இயல்பெனின்
அரிதுமன் றம்ம அறத்தினும் பொருளே"

- *நற்.243.*

'அடைந்தாரைக் காப்பேமென்று முன்னர்க் கூறியபடி பின்னர்க் காப்பதே அறமெனப்படுவது' என்ற கொள்கையால் அறமும் பொருளும் இன்பத்திற்கு எனும் காதற் பாடுபொருள் கொள்கை உறுதியாகிறது; எனவே, இன்பம் பழந்தமிழில் முதலிடத்தைப் பெறுகிறது.

( தொடரும் )

✧ ✧ ✧

## நூற்கொடையாளர்க்கு நன்றி

**பெரும்புலவர் பேராசிரியர் அன்பில் சரவண ஆறுமுக முதலியார்** அவர்கள் பல்லாண்டுகளாகத் தொகுத்து வைத்திருந்த அறுநூறு நூல்களை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குப் பெருந்தன்மையுடன் கொடையாக நல்கிய அவர்களின் குடும்பத்தார்க்கும், அதற்குத் தூண்டுதலாகவும் கருவியாகவும் இருந்த சோழவந்தான் பெருநிலக்கிழார் திருமிகு **வீ. இராமலிங்க முதலியார்** அவர்கட்கும் மதுரைத் தமிழ்ச்சங்கம் தன்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரிமையாக்குகின்றது.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக் குறைந்த செலவில் அறிமுகப்படுத்தும்

# மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்து கொள்ள அரிய வாய்ப்பு

## திட்டத்தின் சிறப்பு பரிசோதனைகள்

1. தலை முதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்தப் பரிசோதனை
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ. சி. ஜி.

- ➢ இரத்தவகை
- ➢ சீரம் கிரியேட்டினைன்
- ➢ சர்க்கரை அளவு
- ➢ கொலஸ்ட்ரால் அளவு

## கூடுதல் பலன்கள்

- ⇨ இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
- ⇨ இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு.
- ⇨ இலவசமாக இரண்டுமுறை தலை. சிறந்த நிபுணர்களால் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

## இத்தனையும் ரூ. 400/- செலவிலேயே

பெண்களுக்கு : பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்று நோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ. 50/- செலுத்தவேண்டும்.

தொடர்புக்கு :

## மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

MMHRC

Only Private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O.Ms. No. 490/19/6/95)

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.

Ph. Call : 42481 (5 lines) 535977 (3 lines)

## உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்

Laser typeset & Printed by : pleiades informatics pvt. ltd. ✆ 0452-540688